1973 பிப்ரவரி 6]

இந்த மருத்துவமனைக்கு வரக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த மருத்துவமனை முன்னரே விரிவாக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், குழந்தைகளைப் பெறுகிறவர்கள், குழந்தைகளைப் பெற்றவர்கள் பெறுவதற்கு முன்னரும், பின்னரும் அதில் கவனம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன் : எழும்பூரில் இருக்கிற மருத்துவமனையில் இந்தத் துறையிலே வல்லுநர்களும், இருக்கிற மருத்துவ நிபுணர் களும் ஒரே இடத்தில் தேங்கிக் கிடக்கிறார்கள். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளுக்கு அவர்களைப் பிரித்து அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த மருத்துவமனை கல்விப் பயிற்சிக்குரிய மருத்துவமனை. இங்கே உள்ள மிகப் பெரிய நிபுணர்கள், பல பேர்களை குழந்தை வைத்தியத்தில் தேர்ச்சி பெறச் செய்து, நாடு முழுவதும் உள்ள மருத்துவ மனைகளில் அவர்கள் சென்று பணி யாற்றுவதற்கு வாய்ப்பு அளிப்பவர்களாக இருக்கிறார்கள். பயிற்சி அளிக்கின்ற கல்வி நிலையத்தோடு தொடர்பு கொண்ட மருத்துவமனை இது என்ற காரணத்தினால் அவர்களையே பிரித்து அனுப்புவது இயலாத காரியம்.

* 27 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடார்க்காடு மாவட்டம், வேலூரில், குழந்தைகளுக் கென்று தனி ஹாஸ்பிட்டல் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் செயல்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஏற்கனவே தனிப்பட்ட வார்டு உள்ளது.

(இ) இக் கேள்விக்கிடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : இப்பொழுது கேட்கப்பட்ட கேள்வியின் அடிப்படையிலே அந்தந்த மாவட்டத்திலே இப்படிப்பட்ட குழந்தைகள் வைத்திய வசதி இருந்தாலும், சென்னையில் வருகிற குழந்தைகளைப் போலவே அவர்களுக்குள்ள அப்படிப்பட்ட வசதிகளை சிறிய அளவிலாவது செய்து, ஒரு சிறிய குழந்தைகள் மருத்துவ விடுதியை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

[1973 பிப்ரவரி 6

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த அளவுக்கு இப்பொழுது மாவட்ட மருத்துவமனைகள் போதுமான அளவுக்கு பெரிய அளவில் கட்டப்படவில்லை என்ற நிலையும், சரியான பெரிய அளவில் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலையும் இருக்கிறது. தனியாக குழந்தைகள் மருத்துவமனை கட்டுவது இப்பொழுது உள்ள சூழ்நிலையில் இயலாத காரியம். குழந்தைகள் வைத்தியத்தில் சிறப்பான பயிற்சி பெற்ற டாக்டர்கள் மாவட்ட மருத்துவ மனைகளில் இடம் பெறுவதற்கு அரசு ஆவன செய்து வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட மருத்துவ மனைக்குக் கூடுதல் கட்டடங்கள்.

* 28 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி தலைமையிட மருத்துவமனையில் குருதி சேமிப்பு நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு எப்போது உத்தரவு இட்டது ?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) : 1971–72 நிதி ஆண்டில் திருச்சிராப்பள்ளி தலைமையிட மருத்துவமனையில் குருதி சேமிப்பு நிலையத்திற்கு கட்டடம் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டது.

(இ) அந்தக் கட்டடத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் அதிகமாக இருந்ததன் காரணமாக அதன் செலவினத்தைக் குறைப்பதற்காக திருத்திய மதிப்பீடுகள் கேட்கப்பட்டுள்ளது. திருத்திய மதிப்பீடுகள் கிடைத்தவுடன் கட்டட வேலை தொடங்கும்.

Meat Laboratory at Madras

* 29 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that a Meat Laboratory has been opened at the Veterinary College, Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) விவரமான அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 331-334-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.